Operation Sovereign Borders

**ஊடக அறிக்கை**

2013 நவம்பர் 22, வெள்ளிக்கிழமை

**அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் வந்து சேர்ந்தவர்களில்**
**எஞ்சிய இலங்கையர்கள் கொழும்பு திரும்பினர்**

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி வந்து சேர்ந்த 79 இலங்கையர்களில் ஒவ்வொருவரையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் வெற்றிகரமாக திருப்பி அனுப்பியுள்ளது.

சென்ற மாதம் சட்டவிரோதமாக வந்து சேர்ந்த 73 பேரும், பாதுகாப்பு மதிப்பீட்டு வழிமுறைகளின் அடிப்படையில், சோதனைக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து, திருப்பி அனுப்பப்படுகையில், கடைசி 6 இலங்கையர்களும் இவர்களுடன் இணைந்துள்ளனர்.

அரசாங்கத்தின் புதிய கொள்கை 'படகு மூலம் சட்டவிரோதமாக நீங்கள் வந்து சேர்ந்தால், இலங்கைக்கு நிச்சயம் திருப்பி அனுப்பப்படுவீர்கள் என்ற காத்திரமான செய்தியை' தெரிவிக்கிறது.

'அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கொள்கைகள் முன்னரிலும் பார்க்கக் கடுமையானவை. வீசா இல்லாமல் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வரவிருப்பவர்கள் அங்கு தங்கியிருக்க முடியாது' என்ற தகவலை அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் எல்லைப்புறப் பாதுகாப்பு அமைச்சர் ஸ்கொட் மொறிசன் இன்று தெரிவித்தார். '2012 ஒக்டோபர் மாதத்தில் இருந்து படகு மூலம் இங்கு வந்து சேர்ந்த 1100 க்கும் அதிகமானோர் தாயகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் விடுக்கப்படும் செய்தி மிகத் தெளிவானதாகும். ஆட்கடத்தல்காரருக்கு பெருந்தொகை பணத்தைக் கொடுப்பவர்கள், தங்களது உயிரையும் பணயம் வைத்து பணத்தையும் இழக்கின்றனர். அவர்களுக்கான வீசா இங்கே காத்திருப்பதில்லை. அவர்கள் கொடுத்த பணத்தை எவ்வகையிலும் பெற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்.

இலங்கையில் இருந்து ஆரம்பிக்கும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளைச் சீர்குலைப்பதில் அவுஸ்திரேலியாவும், இலங்கையும் திடமான அடிப்படையில் ஒத்துழைப்பை மேற்கொண்டுள்ளன.

இந்த விடயத்தில் சொற்ப நடவடிக்கையை மாத்திரம் அவுஸ்திரேலிய அரசாங்கம் மேற்கொள்வதில்லை. ஆட்கடத்தல்காரருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், படகு மூலம் வந்து சேர்பவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கும் அவசியமான கொள்கைகளையும், திடசித்தத்தையும் அது கொண்டுள்ளது.

'படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு வந்து சேர்பவர்களை அரசாங்கம் சொந்த நாட்டிற்கு தொடர்ந்தும் திருப்பி அனுப்பும்'

**பலவந்தமாக அகற்றப்பட்ட மக்கள் மீள் இணைப்பு உதவிகளுக்கு தகுதியற்றவர்களாவர்.**

**ஊடக விசாரணைகள்**

OSB சம்பந்தமாக சகல விசாரணைகளை சுங்கத் திணைக்களம், எல்லைப்புறப் பாதுகாப்பு ஊடகத்துடன் (02) 6275 6793 இல் மேற்கொள்ள முடியும்.